கல்குடா கல்வி வலயம்.

கொவிட் 19 காலத்து கற்றல் செயற்பாடு -2020 (சித்திரை)

தமிழ் - கிரகித்தற் பயிற்சி.

தரம் 5.

பயிற்சி -1

திருமதி.ரே.இராமச்சந்திரன்.

பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.

வண்ணத்துப் பூச்சிகளின் பிரதான உணவு அமுதமாகும். பெரும்பாலும் அவை திரவ உணவையே உண்ணும். அவை கண்களை திறந்தபடியே இரவில் ஓய்வெடுக்கின்றன. இவற்றின் இறக்கைகளில் அமைந்துள்ள நரம்பு மண்டலம் இறக்கைகளுக்கு சக்தியைக் கொடுக்கின்றது. உலகின் பல பகுதிகளிலும் பல வண்ண வண்ணத்துப் பூச்சிகள் காணப்படுகின்றன.

1. இப்பந்தி எதனைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது?
2. வண்ணத்துப் பூச்சிகளின் பிரதான உணவு எது?
3. கண்களைத் திறந்தபடியே ஓய்வெடுக்கும் பிராணி எது?
4. "பலம்" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
5. "பகலில்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
6. "காணப்பட்டன" என்பதன் நிகழ்கால வடிவம் என்ன?
7. " ஓய்வெடுக்கின்றன" என்பதனைப் பிரித்து எழுதினால்

   ---------- + ---------- .

8. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அ.ஃறிணைப் பலவின்பால் சொல்லை எழுதுக.